# ***மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திருவள்ளூர் மாவட்டம், கொரட்டூரில் நடைபெற்ற அரசு விழாவில் பொதுவிநியோகத்திட்டத்தின்கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு மின்னணு குடும்ப அட்டை ரூ. 330 கோடி மதிப்பில் தொடங்கி வைத்ததையடுத்து அதனைத்தொடர்ந்து தருமபுரி மாவட்டம், காரிமங்கலம் மற்றும் பாலக்கோடு ஆகிய பகுதிகளில் குடும்ப அட்டைதாரர்களுக்கு மின்னணு குடும்ப அட்டைகளை மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.***




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (01.04.2017) திருவள்ளூர் மாவட்டம், கொரட்டூரில் நடைபெற்ற அரசு விழாவில் பொதுவிநியோகத்திட்டத்தின்கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு மின்னணு குடும்ப அட்டை ரூ. 330 கோடி மதிப்பில் தொடங்கி வைத்ததையடுத்து அதனைத்தொடர்ந்து தருமபுரி மாவட்டம், காரிமங்கலம் மற்றும் பாலக்கோடு ஆகிய பகுதிகளில் குடும்ப அட்டைதாரர்களுக்கு மின்னணு குடும்ப அட்டைகளை மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கி தெரிவித்ததாவது :-

நமது மாவட்டத்தில் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையின் கீழ் 1000 நியாய விலைக் கடைகளும், 9 மகளிர் நியாய விலைக் கடைகளும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கீழ் 40 நியாயவிலைக் கடைகளும் என மொத்தம் 1049 நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருகிறது. நமது மாவட்டத்தில் 3,84,174 குடும்ப அட்டைகள் நடைமுறையில் உள்ளது. தற்போது முதல் கட்டமாக தருமபுரியில் 10782 மின்னணு குடும்ப அட்டைகளும், நல்லம்பள்ளியில் 11352 மின்னணு குடும்ப அட்டைகளும், பாலக்கோடு 8717 மின்னணு குடும்ப அட்டைகளும், காரிமங்கலம் 12797 மின்னணு குடும்ப அட்டைகளும், பென்னாகரம் 15394 மின்னணு குடும்ப அட்டைகளும், அரூர் 8330 மின்னணு குடும்ப அட்டைகளும், பாப்பிரெட்டிப்பட்டி 8856 மின்னணு குடும்ப அட்டைகளும் ஆக மொத்தம் 76,228 குடும்ப அட்டைதாரர்ளுக்கு மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு வருகிறது

தமிழ்நாடு வாணிப நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள் மூலமாக நமது மாவட்டத்தில் 1049 நியாய விலைக்கடைகள் வாயிலாக, அத்தியாவசிய பொருட்கள் அரிசி, கோதுமை, சர்க்கரை, மண்ணெண்ணைய் மற்றும் சிறப்பு பொது விநியோகத்திட்டத்தின் கீழ் பருப்பு மற்றும் பாமாயில் எண்ணைய் ஆகியவை குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. மேலும் பொதுமக்கள் அத்தியவசியப் பொருட்கள் வழங்குவதற்கு தற்போது தாள்களில் அச்சடிக்கப்பட்டு குடும்ப அட்டை பயன்படுத்தப்பட்டு வருகின்றனர். இத்திட்டம் 2005-ம் ஆண்டு வழங்கப்பட்டு ஆண்டுதோறும் நீட்டிக்கப்பட்டு வருகிறது. மேலும் நியாயவிலைக்கடைகளில் தேவையான அளவு அத்தியவசியப் பொருட்கள் இருப்பு வைப்பதை உறுதிப்படுத்தவும், போலி குடும்ப அட்டைகள் மற்றும் போலி பட்டியலிடுதல் ஆகியவற்றை தவிர்க்கவும், மேலும் பொதுவிநியோகத் திட்டத்தினை முழுமையாக கணினி மயமாக்கி அனைத்து அலுவலகங்கள் மற்றும் நிறுவனங்களை கணினி மூலம் ஒருங்கிணைத்து அனைத்து நடவடிக்கைகளையும் இத்திட்டத்தின் மூலம் முழுமையாக கண்காணித்து, இணையதளம், மின்னஞ்சல், குறுந்தகவல் தொலைபேசி வாயிலாக நுகர்வோரின் குறைகளை தெரிவிக்க மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் 1077, “1967” மற்றும் “1800 425 5901” ஆகிய கட்டணமில்லா தொலைபேசி என்ற எண்களில் புகார்கள் தெரிவிக்க இணையவழி சேவைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் தருமபுரி வட்டத்தில் 999 மின்னணு குடும்ப அட்டைகளும், பாலக்கோடு 767 மின்னணு குடும்ப அட்டைகளும், பென்னாகரம் 1012 மின்னணு குடும்ப அட்டைகளும், அரூர் 812 மின்னணு குடும்ப அட்டைகளும், பாப்பிரெட்டிப்பட்டி 926 மின்னணு குடும்ப அட்டைகளும், நல்லம்பள்ளி 1160 மின்னணு குடும்ப அட்டைகளும், காரிமங்கலம் 921 மின்னணு குடும்ப அட்டைகளும் என மொத்தம் 6597 மின்னணு குடும்ப அட்டைகளும் குடும்ப அட்டைதாரர்களுக்கு முதற்கட்டமாக தற்போது வழங்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக நமது மாவட்டத்தில் உள்ள அனைத்து தாலுக்காகளிலும் குடும்ப அட்டைதாரர்கள் அனைவருக்கும் படிப்படியாக இந்த மின்னணு

குடும்ப அட்டைகளும் வழங்கப்படும் என மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வழங்கல் அலுவலர் திருமதி. மகாலட்சுமி, கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணை பதிவாளர் திரு. சந்தானம், துணைப்பதிவாளர் திரு. மணிகண்டன், வட்டாட்சியர்கள் திரு. அதியமான், திரு. கண்ணன், வட்ட வழங்கல் அலுவலர் திருமதி. வள்ளி, உட்பட துறை ரீதியான அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.